**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்**

**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017**

**புவியியல்**

| சுட்டெண் :- ........................................... | தரம் : - 10 | நேரம் :- 3. 00 மணித்தியாலம் |
|---|---|---|

- **கவனிக்க.**

❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.

❖ சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

❖ தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

## வினாத்தாள் – I

❖ ***01 முதல் 10 வரையான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள்ளே இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டில் எழுதுக.***

*(01)* ஞாயிற்றுத் தொகுதியில் உயிரினங்கள் வாழக்கூடிய ஒரே ஒரு கோள் ............................. ஆகும்.

(புவி / செவ்வாய் / வெள்ளி)

*(02)* நீர்க்கோளத்தில் உள்ள நீர் நிலைகளிலிருந்து ................................................ மூலம் வளிமண்டலத்தை சேர்கின்றது.

(ஆவியாக்கம் / ஆவியுயிர்ப்பு / படிவுவீழ்ச்சி)

*(03)* ............................................ படை சிலிக்காவையும், மக்னீசியத்தையும் கொண்டிருக்கின்றது.

(மூடி/ சீயல் / சீமா)

*(04)* அதிகளவு நீர்ப்பரப்பைக் கொண்டுள்ள தகடு ................................................ ஆகும்.

(அந்தாட்டிக்கா / பசுபிக்/ இந்தோஅவுஸ்ரேலியா)

*(05)* *1 : 50 000* இடவிளக்கவியல் படங்களில் 1km தூரம் ......................................... cm காட்டும்.

**(2 cm / 4 cm / 6 cm)**

*(06)* ............................... முருகைக் கற்பார் பரம்பல் இலங்கையின் தென்மேற்கு பகுதியில் காணப்படுகின்றது.

(பாசிக்குடா / ஹிக்கடுவ / அறுகம்குடா)

*(07)* இலங்கையில் வெற்றிலை ஏற்றுமதிக் கிராமமாக ............................. காணப்படுகின்றது.

(இராஜாங்கனை / கட்டுக்கம்பொல / தம்பதெனிய)

*(08)* அவுஸ்ரேலியாவில் ......................................................... ஏரி காணப்படுகின்றது.

(அயர் / தங்கனிக்கா / மாலாவி)

The National e-learning Portal for The General Education

**(09)** அண்மைக் காலத்தில் விதைத் தேயிலையை விட ………………………………….………… மூலம் தேயிலை வளர்த்தல் பிரபல்யம் அடைந்து வருகிறது.

**(ஒட்டுத்தேயிலை / வங்கித்தேயிலைத் தண்டு / பதியந்தேயிலை)**

**(10)** இலங்கையில் …………………………………..………… இடத்தில் வெண்களி பரந்துள்ளது.

**(ரத்தோட்ட / கொரண / மீபே)**

❖ **11 முதல் 15 வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவை சரியாயின் 'ச' இனையும், பிழையாயின் 'பி' இணையும் சுற்றி வட்டமிடுக.**

**(11)** யூரல் மலை ஐரோப்பா கண்டத்தையும் ஆசியாக் கண்டத்தையும் பிரிக்கின்றது.

**ச / பி**

**(12)** மொசப்பத்தேமிய மக்கள் தாம் வாழ்ந்த பிரதேசத்தினை களிமண்ணைக் கொண்டு அமைத்த படத்தின் மூலம் அடையாளப்படுத்தினர் **ச / பி**

**(13)** இலங்கையின் ஈரவலயத்தில் அதிகளவு நெல் உற்பத்தி செய்கை பண்ணப்படுகின்றது.

**ச / பி**

**(14)** இலங்கையில் 1972ம் ஆண்டு சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது.

**ச / பி**

**(15)** பாதுகாக்கப்பட்ட சரணாலயத்திற்குரிய எல்லை பச்சை நிறத்தினால் குறித்துக் காட்டப்படுகின்றது. **ச / பி**

The National e-learning Portal for the General Education

❖ **16 முதல் 20 வரையிலான வினாக்களில் 'அ' மற்றும் 'ஆ' ஆகிய இரு நிரல்கள் தரப்பட்டுள்ளன. அவ்விரு நிரல்களுள் 'அ' நிரலுக்கேற்ப 'ஆ' நிரலைப் பொருத்தினால் வரும் சரியான விடையைக் குறித்து நிற்கும் இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

**(16)** உலகின் உள்ள கண்டங்கள் 'அ' நிரலிலும், கண்டங்களில் உள்ள மலைத்தொடர்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ள ஒழுங்குகளுடன் 'ஆ' நிரலினைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| **'அ'** | **'ஆ'** |
|---|---|
| 1. ஆசியா | (A) றொக்கி மலைத்தொடர் |
| 2. ஆபிரிக்கா | (B) பெரிய பிரிப்பு மலைத்தொடர் |
| 3. அவுஸ்ரேலியா | (C) இமயமலைத்தொடர் |
| | (D) டிரக்கன்பேர்க் மலைத்தொடர் |

(1) CBD (2) CDB (3) ABC (4) BCD [……....]

**(17)** உலகில் உள்ள நதிகள் 'அ' நிரலிலும், அந் நதிகள் உற்பத்தியாகும் மூலங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ள ஒழுங்குகளுடன் 'ஆ' நிரலினைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| **'அ'** | **'ஆ'** |
|---|---|
| 1. நைல் நதி | (A) உருகிய பனியிலிருந்து |
| 2. றைன் நதி | (B) ஊற்றிலிருந்து |
| 3. மகாவலி கங்கை | (C) ஏரியிலிருந்து |
| | (D) மலைப் பகுதியிலிருந்து |

(1) CAD (2) ACD (3) BCD (4) CDA [……....]

**(18)** இலங்கையின் விவசாயப் பயிர்கள் 'அ' நிரலிலும், அவ் விவசாய பயிர்களுக்கான ஏற்றுமதிப் பிரதேசங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ள ஒழுங்குகளுடன் 'ஆ' நிரலினைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| **'அ'** | **'ஆ'** |
|---|---|
| 1. நெல் | (A) ராஜாங்கனை |
| 2. முந்திரி | (B) குருணாகல் |
| 3. மிளகாய் | (C) தம்பதெனியா |
| | (D) கட்டுக்கம்பொல |

(1) BAC (2) BCA (3) ABC (4) CDB [……....]

**(19)** 1 : 50 000 இடவிளக்கப் படங்களில் பயன்படுத்தப்படுகின்ற குறியீடுகள் 'அ' நிரலிலும், அதற்கான நிறங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ள ஒழுங்குகளுடன் 'ஆ' நிரலினைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| **'அ'** | **'ஆ'** |
|---|---|
| 1. சிறு வீதி | (A) பச்சை |
| 2. நெல் | (B) மஞ்சள் |
| 3. சமவுயரக் கோடுகள் | (C) கறுப்பு |
| | (D) கபிலம் |

(1) BAD (2) ABC (3) BDA (4) CBD [……....]

**(20)** இலங்கையின் தேயிலைப் பயிர்ச்செய்கைகள் நடைபெறும் பகுதிகள் 'அ' நிரலிலும், அதில் உள்ளடங்கும் மாவட்டம் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ள ஒழுங்குகளுடன் 'ஆ' நிரலினைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| **'அ'** | **'ஆ'** |
|---|---|
| 1. உயர்நிலம் | (A) யாழ்ப்பாணம் |
| 2. மத்தியநிலம் | (B) கண்டி |
| 3. தாழ்நிலம் | (C) அம்பாந்தோட்டை |
| | (D) நுவரெலியா |

(1) ABC (2) BCD (3) DBC (4) DCB [……....]

❖ ***21 முதல் 25 வரையான வினாக்களின் இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை வைத்துப் பூரணப்படுத்துக.***

**(21)** இலங்கையின் குடிசைக் கைத்தொழிலான தளபாடப் பொருட்கள் ………………………………. பிரதேசத்தில் சிறப்படைந்துள்ளது.

**(22)** உலகின் காலநிலைப் பரம்பல் பற்றிய கருத்தினை முதன் முதலில் ……………………………. வெளியிட்டார்.

**(23)** ……………………………………………. நாட்டினரால் கண்டுபிடிக்கப்பட்ட தேயிலை இன்று உலகின் அனைத்து நாடுகளிலும் நுகரப்படுகின்றது.


**(24)** இலங்கையின் மிகப் பெரிய மாவட்டம் ………………………………………………… ஆகும்.

**(25)** ஹிங்குராங்கொட நெல் ஆராய்ச்சி நிலையத்தில் …………………………………… நெல்லினம் கண்டறியப்படுகின்றது.


❖ ***26, 27 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தினைப் பயன்படுத்துக.***

**(26)** இலங்கையில் வெண்களி காணப்படும் மாவட்டம் ………………………. எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

**(27)** இலங்கையின் போகல காரியச் சுரங்கம் காணப்படும் மாவட்டத்தினை ………………… எழுத்து குறித்துக்காட்டுகின்றது.



❖ **உலகில் வலயங்கள் ரீதியாக இலத்திரனியல் உபகரணங்களின் உற்பத்தி வரைபில் காட்டப்பட்டுள்ளது. அதனை நன்கு பரிசீலித்து 28 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**




***(28)*** வரைபின்படி உலகில் அதிகளவு இலத்திரனியல் உபகரணங்களை …………………………….. நாடு உற்பத்தி செய்கின்றது.

***(29)*** வரைபின்படி உலகின் குறைந்தளவு இலத்திரனியல் உற்பத்தியில் ஈடுபடும் ஆசிய நாடு ………………………………………………… ஆகும்.

***(30)*** வரைபடத்தின்படி அதிகளவு இலத்திரனியல் உபகரணங்கள் உற்பத்தி செய்யும் கண்டம் …………………………………… ஆகும்.

❖ ***31* முதல் *34*** வரையான ஒவ்வொரு **வினாவுக்கும்** தரப்பட்டுள்ள நான்கு **விடைகளுள் சரியான அல்லது மி**கவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய **இலக்கத்தினை உரிய புள்ளி**க்கோட்டில் **எழுதுக.**

***(31)*** இலங்கையின் அமைவிடத்தினைக் காட்டும் நெடுங்கோட்டின் பெறுமானம் முறையே

(1) $79^0\ 42' - 81^0\ 52'$

(2) $79^0\ 40' - 80^0\ 51'$

(3) $76^0\ 40' - 81^0\ 50'$

(4) $79^0\ 44' - 82^0\ 00'$ [……....]

***(32)*** இலங்கையில் பிரதான மைக்ரோ மோட்டார் வாகனம் பொருத்தும் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்

(1) போகல

(2) பொல்காவலை

(3) எம்பிலிப்பிட்டிய

(4) பொல்கொல்ல [……....]

***(33)*** இலங்கையின் காரியத்தினை அதிகளவு கொள்வனவு செய்யும் பிரதான நாடு

(1) தென்கொரியா

(2) சீனா

(3) பிறேசில்

(4) ஜப்பான் [……....]

**(34)** விசேட தரங்களைக் கொண்ட நெற் பயிராக அறிமுகப்படுத்தப்பட்ட நெல் இனம்

(1) பொன்னி அரிசி

(2) IR 8

(3) கீரிச் சம்பா

(4) மொட்டைக் கறுப்பான் [……....]

❖ **கீழே தரப்படும் தகவல்களைப் பயன்படுத்தி 35, 36 ஆம் வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க.**

(A) – சனத்தொகை அதிகரிப்பு

(B) – உயர் வெப்பநிலை

(C) – காடழிப்பு

(D) – மழைவீழ்ச்சி அதிகம்

(E) – பனிப்பாறை உருகுதல்

**(35)** ஒரு காரணியின் ஏற்படும் அதிகரிப்பு இன்னொரு காரணியிலும் அதிகரிப்பினை ஏற்படுத்துவதனைக் காட்டும் இரண்டு விடயங்களைக் கொண்டிருக்கும் விடை

(1) B, C (2) A, C (3) D, E (4) B, E [……....]

**(36)** ஒரு காரணியில் ஏற்படும் அதிகரிப்பு இன்னொரு காரணியின் அழிவு துரிதப்படுத்தப் படுவதனைக் காட்டும் இரண்டு விடயங்களைக் கொண்டிருக்கும் விடை

(1) B, E (2) A, E (3) B, D (4) B, A [……....]

**(37)** உயிர்களின் சுவாசத்திற்குத் தேவையான வாயு

(1) ஆகன்

(2) ஒட்சிசன்

(3) நைதரசன்

(4) காபனீரொக்சைட் [……....]

**(38)** மத்திய கோட்டிற்கும் கடகக் கோட்டிற்கும் இடையில் அமைந்துள்ள காலநிலை வலயம்

(1) அயன வலயம் (2) முனைவு வலயம்

(3) இடைவெப்ப வலயம் (4) வரண்ட வலயம் [……....]

**(39)** உலகின் பெரும்பாலான மக்களின் முக்கிய உணவாக விளங்கும் பயிர்

(1) நெல் (2) கோதுமை

(3) குரக்கன் (4) தேயிலை [……....]

**(40)** புவியியற் தகவல்களை மிக நுட்பமாக படமாக்கும் நவீன படவரைமுறைகளில் ஒன்று

(1) புவியியல் தகவல் முறைமை (2) இடவிளக்கப்படம்

(3) கருப்பொருட் படங்கள் (4) தேசப்படம்

(40 x 1 = 40 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

## வினாத்தாள் – II

- **கவனிக்க.**

❖ **இவ் வினாத்தாள் I, II என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.**

❖ **பகுதி – I இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.**

❖ **பகுதி – II இலிருந்து விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.**

❖ **எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.**

## பகுதி – I

**(01)** (அ) இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1 : 50, 000 என்னும் அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்கு தரப்பட்டுள்ளது. படத்தினைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்ட தாளினைப் பயன்படுத்துக.

(i) படத்தில் C என்ற எழுத்தினால் காட்டப்படும் விடயம்

**(தேவாலயம் / அளியடைப்பு / அமைவிடம் / நதி)**

(ii) படத்தில் D என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்படும் சதுரத்தில் செய்கை பண்ணப்படும் பயிர்ச் செய்கை

**(வேறு பயிர்கள் / இறப்பர் / வீட்டுத்தோட்டம்)**

(iii) படத்தில் P – Q இடையில் காட்டப்படும் பௌதிக அம்சம்

**(குறுக்கு பள்ளத்தாக்கு / நெடுக்குப் பள்ளத்தாக்கு / ஆறு)**

(iv) படத்தில் E இலிருந்து F வரை செல்லும் நிர்வாக எல்லை

**(மாவட்ட எல்லை / மாநகர எல்லை / மாகாண எல்லை)**

(v) (i) படத்தில் G என்ற எழுத்தினால் காட்டப்படும் சதுரத்தில் உள்ளடக்கப்பட்ட பகுதியில் காணப்படும் சேவை மையம் ஒன்றினைப் பெயரிடுக. .................

(ii) படத்தில் G என்ற எழுத்தினால் காட்டப்படும் சதுரத்தில் வாழும் பெரும்பாலான மக்களால் பின்பற்றப்படும் மதம் ................................

(vi) படப்பகுதி பற்றிய நான்கு கூற்றுக்கள் (a) (b) (c) (d) ஆகியவற்றின் கீழ் தரப்பட்டுள்ளது. அந்த ஒவ்வொரு கூற்றினையும் வாசித்து சரியாயின் '**ச**' எனவும் பிழையாயின் '**பி**' எனவும் விடைத்தாளில் அதற்கெனத் தரப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.

(a) படப் பகுதியில் வடகிழக்கு காற்பகுதியால் வெளியரும்பிய பாறைகள் காணப்படுகின்றன. [ ச / பி ]

(b) படப் பகுதியில் அதிகளவில் பெருந்தோட்டப் பயிர்கள் செய்கை பண்ணப்படுகின்றன. [ ச / பி ]

(c) படப் பகுதியில் A தரப் பிரதான வீதி காணப்படுகின்றது. [ ச / பி ]

(d) படப் பகுதியில் ஆற்று வடிநிலங்களைச் சார்ந்து சிறியளவில் நெற்பயிர் செய்கை பண்ணப்படுகின்றது. [ ச / பி ]

**(10 புள்ளிகள்)**

(ஆ) உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக உலகப் புறவுருவப் படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலினைப் பயன்படுத்துக.


(i) A, B மற்றும் C என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள மலைத்தொடர்களில் யூரல் மலைத் தொடரினைக் குறித்துக்காட்டும் எழுத்து

(ii) D, E மற்றும் F என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள நாடுகளில் கோதுமைச் செய்கையில் ஈடுபடும் நாடான ஐக்கிய அமெரிக்காவைக் குறிக்கும் எழுத்து

(iii) G, H மற்றும் I என்ற எழுத்துக்களினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள சமவெளிகளில் வடஅரேபியன் சமவெளியினைக் குறிக்கும் எழுத்து


(iv) J, K மற்றும் L என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள நாடுகளுள் பாற்பண்ணையில் ஈடுபடும் நாடான இந்தியாவினைக் குறிக்கும் எழுத்து

(v) M, N மற்றும் O என்ற எழுத்துக்களில் காட்டப்பட்டுள்ள தீவுகளில் பிலிப்பைன்ஸ் தீவினைக் குறிக்கும் எழுத்து




*(5 புள்ளிகள்)*

(இ) உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கைப் புறவுருவப் படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலினைப் பயன்படுத்துக.




(i) A, B மற்றும் C என்ற எழுத்துக்களில் குறித்துக் காட்டப்பட்டுள்ள மாவட்டங்களில் இலங்கையின் இடைமாறு வலயத்தில் நெல் உற்பத்தி அதிகளவில் இடம்பெறும் குருநாகல் மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்து

(ii) D, E மற்றும் F என்ற எழுத்துக்களினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள மாவட்டங்களில் பால் உற்பத்தியில் முக்கியம் பெறும் அம்பேவெல பிரதேசம் அமைந்துள்ள நுவரெலியா மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்து

(iii) G, H மற்றும் I என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள மாவட்டங்களில் நடப்பட்ட கெனரத்கொட பூங்கா அமைந்துள்ள கம்பகா மாவட்டத்தினைக் குறிக்கும் எழுத்து

(iv) J, K மற்றும் L என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள மாவட்டங்களுள் போம்புவல நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள களுத்துறை மாவட்டத்தினைக் குறிக்கும் எழுத்து

(v) M, N மற்றும் O என்ற எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களில் மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகம் அமைந்துள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்தினைக் குறிக்கும் எழுத்து

*(5 புள்ளிகள்)*

“

## பகுதி – II

**(02)** (i) "உயிர்க்கோளம்" வரையறை செய்க.

*(2 புள்ளிகள்)*

(ii) உயிர்க்கோளத்தின் செயன்முறைகளைப் பாதிக்கும் காரணிகள் இரண்டு குறிப்பிட்டு ஒவ்வொரு உதாரணம் தருக.

*(3 புள்ளிகள்)*

(iii) உயிர்க்கோளத்தின் நிலைத்திருப்பினைப் பாதிக்கும் மனித நடவடிக்கைகள் மூன்று குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக.

*(5 புள்ளிகள்)*

**(03)** (i) கற்கோளத்தின் பயன்பாடுகள் மூன்றினைத் தருக.

*(3 புள்ளிகள்)*

(ii) புவித் தொகுதியின் உபதொகுதிகள் நான்கினைக் குறிப்பிடுக.

*(4 புள்ளிகள்)*

(iii) இந் நான்கு உபதொகுதிகளுக்குமிடையிலாக இடைத் தொடர்புகளினைப் பெயரிடுக.

*(3 புள்ளிகள்)*

**(04)** (i) இலங்கையின் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் பிரதான வலயங்கள் மூன்றினைத் தருக.

*(3 புள்ளிகள்)*

(ii) நெற் பயிர்ச்செய்கைக்குத் தேவையான பௌதிகக் காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

*(4 புள்ளிகள்)*

(iii) இலங்கை அரசாங்கம் *1960* ஆம் ஆண்டிற்குப் பின் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் விருத்தியில் கவனம் செலுத்தி வருவதற்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக.

*(3 புள்ளிகள்)*

**(05)** (i) இரும்புக்கு உற்பத்தியில் ஈடுபடும் நாடுகள் நான்கினைத் தருக.

*(2 புள்ளிகள்)*

(ii) இரும்பு உற்பத்தியுடன் இணைந்த பொருளாதார நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

*(3 புள்ளிகள்)*

(iii) இரும்புருக்குக் கைத்தொழிலின் அண்மைக் காலப் போக்குகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

*(5 புள்ளிகள்)*

The National e-learning Portal for The General Education

**(06)** (i) உலகின் பிரதான காலநிலை வலயங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

*(3 புள்ளிகள்)*

(ii) அக்காலநிலை வலயங்களின் பிரதான பண்புகள் ஒவ்வொன்றினைக் குறிப்பிடுக.

*(3 புள்ளிகள்)*

(iii) காலநிலை மனித நடவடிக்கையினைப் பாதிக்கின்ற முறையினை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

*(4 புள்ளிகள்)*

**(07)** (i) (a) இலங்கையில் மேற்கொள்ளப்படும் குடிசைக் கைத்தொழில்கள் நான்கினைக் குறிப்பிடுக.

*(2 புள்ளிகள்)*

(b) இலங்கையின் குடிசைக் கைத்தொழிலினை மேம்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினைத் தருக.

*(2 புள்ளிகள்)*

(ii) குடிசைக் கைத்தொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

*(2 புள்ளிகள்)*

(iii) குடிசைக் கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்குகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

*(4 புள்ளிகள்)*

The National e-learning Portal for The General Education


Medaviyangoda
Elaihala
Elaihala North
Danawala
Mawita West
TIBOTUWAKOTA
Koswatta
NAWALAHERA
Embalagedara North
Mawita
MAYITA
Elaihala
Tummodara
Embalagedara South
Embalagedara
Agrarian Serv
Divisional Sec
Neluwa
Kumburegoda
Dispensary
Galgodagama
Mahapanwila
TAWALAMA DIVISION
(HINIDUMPATTUWA SOUTH)
Polbindinakanda
Godapitagama
Mawanana
Amuhena
HABARAKADAWATTA
Habarakada West
Habarakada East
Gigunmaduwa
Hallakanda
Habarakada West
Nattanpitiya
Tawalama North
Kudagalpola
Divisional Secretariat
Dehigera
Tawalama
JASMIN VALLY
Pinus
Dispensary
Pradeshiya Sabha
Kospelokanda
Bataliena
Newatimulla
Tawalama South
Mahamadoriya
Hiniduma West
Hiniduma North
Hiniduma West Ihala
Hiniduma East Ihala
Tawalama Forest
A
B
C
D
E
F
G
P
Q
Hiniduma 2.6 km
150
80° 20′
Pitabeddara 2.0 km